திரு. து. புருசோத்தமன்: பேரவைத் தலைவர் அவர்களே, அவர் படிக்கின்ற போது ஒன்றைத் தெரிந்துக் கொண்டேன். அதாவது தடுப்புச்சுவர் கட்டப்பட்டிருக்கிறது என்று. அது, தி. மு. க. ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உலக வங்கி மூலம் பணம் பெற்று அதைச் செயல்படுத்தப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்,

திரு. து. புருஷோத்தமன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. காலத்தில் அந்த கரையோரப் பகுதிகளில் தடுப்புச்சுவர் கட்டப்பட்டது. அதைத்தொடர்ந்து நாங்கள் பல முறை அந்தப் பகுதிகளில் ஒரு நிரந்தர ஏற்பாடு செய்யவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறோம். உலக வங்கி மூலம் பணம் பெற்று செய்வதற்கு முன்பே இந்த அரசு பணம் செலுத்தி அந்தப் பகுதிகளில் தடுப்பு சுவர் கட்டி பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடுப்புச்சுவர் கட்டப்பட்டது என்று தான் தெரிவித்தேன். அதை அ.இ.அ.தி.மு.க, கட்டியதா? தி.மு.க. கட்டியதா என்று நான் தெரிவிக்கவில்லை. அது தி.மு.க.ஆட்சியில் கட்டப்பட்டதா? இல்லை காங்கிரஸ் ஆட்சியில் கூட கட்டியிருக்கலாம். அந்தப் புள்ளி விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை. உலக வங்கி திட்டத்தின்கீழ் அந்த நீர்த்தேக்கப் பகுதிகளில் நடவடிக்கை எடுக்க எல்லா விதமான முயற்சிகளும் எடுக்கப் பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடையாறு கரையோரங்களிலுள்ள குடிமைப் பதிகளை மேம்படுத்தும் திட்டம்.

வினா எண். 71—திரு ச. பாலகிருஷ்ணன்; மாண்மிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் அடையாறு கரை ஓரங்களில் உள்ள குடிசைப் பகுதிகளை மேம்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதற்காக எவ்வளவு தொகை செலவிடப் படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—

(அ) அடையாறு கரை ஓரத்தில் மொத்தம் 26 குடிசைப் பகுதிகள் உள்ளன. அவற்றில் அரசு மற்றும் மாநகராட்சிக்குச் சொந்தமான நிலங்களில் உள்ள 12 குடிசைப்பகுதிகளை மேம் படுத்தும் திட்டம் உண்டு.

(ஆ) இந்நாள் மதிப்பின்படி ரூ.112.94 இலட்சங்கள்.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேலைகள் எப்போது துவங்கப்படும்? எப்போது முடியும்? இந்தத் திட்டத்தின் மூலம் பயனடையும் குடிசைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடம் 8 பகுதியில் 721 குடும்பங்கள் என்ற தகவல் இருக்கிறது. மேலும் ஒரு பகுதியில் 298 குடும்பங்கள் என்ற தகவல் இருக்கிறது. மற்ற இடத்தில் எவ்வளவு பேர் என்ற தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு.ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மற்ற முக்கிய நகரங்களில் உள்ள பகுதிகளுக்கும் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தி செயல்படுத்தும் எண்ணம் உள்ளதா? அதைச்செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி ஆலோசனை செய்யவேண்டும்.

குடிநீர் வடிகால் வாரியத்திற்குத் தேவையான குழாய்கள் தயார் செய்யும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

வினா எண். 72. திரு. கே. ஆர். கணபதி திரு.எஸ். டி. உகம்சந்த் டாக்டர் கே. பி. இராமலிங்கம்— மற்றும் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் குடிநீர் வடிகால்த் வாரியத்திற்கு தேவையான குழாய்கள் தயார் செய்யும் தொழிற்சாலை அமைக்கப் படுமா

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குத் தேவையான கற்சாரைக் குழாய்கள் (Pre stressed concrets pipes) மற்றும் சுட்டமண் குழாய்கள் (Stone ware pipes) ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளை தமிழகத்தில் தகுதி வாய்ந்த இடங்களில் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து பூர்வாங்க நடவடிக்கை வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.